
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1211

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

65

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# கழகத்தின் அறிவு மரபும்... ரகுமான்கானின் உரைகளும்...



ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இல்லாவிட்டாலே, சலசலத்துப்போகும் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில், எமர்ஜென்சிக்குப் பிறகு 12 ஆண்டுக்காலம் எதிர்க்கட்சியாக இருந்த போதிலும், தி. மு.கழகம் எப்படி உயிர்ப்போடு இருந்தது என்றால், அதன் வீரியமிக்க களச் செயல்பாடுகள்தான் காரணம். களத்தில் போராடுவதற்கான, செயல்படுவதற்கான ஆற்றலைத் தரும் அறிவூற்றாக முத்தமிழறிஞர் கலைஞர் திகழ்ந்தார். திராவிட இயக்கமே அறிவியக்கம் என்பதால், அந்த அறிவு மரபு இன்றுவரை தொடர்கிறது. நாளையும் தொடரப்போகிறது. ராணுவப் பட்டாளத்தை வழிநடத்தும் படைத்தளபதி போல அறிவுச் சிந்தனையைத் தன்னோடு இருக்கும் முன்னணி வீரர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கடத்திட, அது முன்னணி வீரர்களிடம் இருந்து கடைக்கோடித் தொண்டர்கள் வரை கடத்தப்பட்டது. பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் கட்டிக்காத்த இந்த இயக்கத்தில், அத்தகைய முன்னணி வீரர்கள் பல்லாயிரக்கணக்கில் இருந்தனர். இந்த முன்னணி வீரர்களுக்குப் பக்கபலமாகக் களத்திலும் கழகத்திலும் இலட்சக்கணக்கான சிப்பாய்கள் இருந்தனர்.

தூங்கி எழுவது முதல் இரவு தூங்கச் செல்லும் வரையில் அவர்கள் வாழ்வின் அனைத்து நிலைகளிலும், ஒவ்வொரு நொடியிலும் பணம் - பதவி - பொருள் என எல்லாவற்றையும் கடந்து, கழகமே அவர்களின் முதன்மைப் பற்றாக இருந்தது. இத்தகைய இலட்சியமிக்க தொண்டர்களும் செயல்பாட்டாளர்களும், உலகில் வேறெந்த இயக்கத்திற்கும் கிட்டியிருக்க மாட்டார்கள். அப்படியே கிட்டியிருந்தாலும், அது 75 ஆண்டுகள் நீண்ட பாரம்பரியமாகத் தொடர்ந்தும் இருக்காது. அந்தப் பெருமை மிகு வரலாற்றுக்குச் சொந்தமான திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆராய்ந்திட முனையும் எவருக்கும், மிக முக்கியமான காலகட்டம் என்றால், அது எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலம்தான். அந்தக் காலத்தில், இயக்கம் எப்படி உறுதியோடு நின்றது என்பதை ஆராய முற்படும்போது, கலைஞரின் ஆளுமைப் பண்போடு சேர்த்து கிடைக்கும் மற்றொரு பதில், சட்டமன்றத்தில் கழகம் வைத்த வாதங்களும் எழுப்பிய வினாக்களும்.

அந்த வாதங்கள், வினாக்களில் இடி - மின்னல் - மழையாக ரகுமான்கானும், சுப்புவும், துரைமுருகனும் ஆராய்ச்சிப் பக்கங்களில் நிச்சயம் இடம்பெறுவர். அதில், சிறுபான்மைச் சமூகத்து உடன்பிறப்பாகக் கழகத்திற்கும் முஸ்லீம்களுக்குமான உறவையும் சேர்த்துப் பறைசாற்றுவார் ரகுமான்கான். தமிழ்நாடு சட்டமன்றத்தில், 1977-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், இரகுமான்கான் ஆற்றிய எழுச்சிமிக்க உரைகளை வாசிக்கும் எவருக்கும் நிச்சயம் அந்த உணர்வு ஏற்படாமல் இருக்காது.

1977 ஆகஸ்ட் 26-ஆம் தேதி, எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழ்நாடு அரசு, பொதுவாழ்க்கையில் ஈடுபடுவோர் மீதான புகார் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட சட்டம் குறித்து, ஒரு விவாதம் நடத்தியுள்ளது. அந்த விவாதத்தின்மீது பேசிய ரகுமான்கான், "அன்றைய தினம் அகலிகை, இராமன் பாதம் பட்டு புனிதமடைந்ததைப் போல, இன்றைக்குப் புகார் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள், நான் யார் என்று சொல்லத் தயாராக இல்லை, யாரோ ஒரு இராமச்சந்திரன் பாதம் பட்டு, இன்றைக்குப் புனிதமாகிக் கொண்டிருக்கிறார்கள்" என்று இராமாயணக் காட்சியோடு எம்.ஜி.ஆரை மறைமுகமாக ஒப்பிட்டு இலக்கிய நயத்தோடும் நையாண்டியாகவும் பேசினார். ஊழல் ஒழிப்புக்காகவே தொடங்கப் பட்ட இயக்கமாக அன்றைக்குத் தன்னைக் காட்டிக்கொண்ட அ.தி.மு.கவுக்கு, அக்கட்சியினர், அமைச்சர்களே யார் யாரெல்லாம் லஞ்சம் வாங்கியிருக்கிறார்கள், அது தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் என்னவெல்லாம் என்று அந்த உரையிலே ஆணித்தரமாகக் கருத்துகளை எடுத்துவைத்தார் ரகுமான்கான்.

மேலும் சிலருடைய பெயரைப் பட்டியலிட்டு, "இவர்கள் எல்லாம் சாதாரணமானவர்கள்தானே! அரசியலுக்கு வந்ததற்குப் பிறகு, எம்.பி.க்களாகவும் எம்.எல்.ஏக்களாகவும் இருப்பவர்கள் எல்லாம், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களுக்கு அண்ணா நகரிலும் மற்ற இடங்களிலும் எப்படி இடம் வந்தது?" என்றெல்லாம் பட்டியலிட்டு அவர் பேசியது, அ.தி.மு.க.வின் பிம்பத்தை சுக்குநூறாக்கியது.

மேலும், 1977 ஆகஸ்ட் 29 அன்று, பொது விற்பனை (திருத்த) சட்ட முன்வடிவு தொடர்பான விவாதத்திலே பேசும்போது, ஒன்றிய அரசின் வரிவசூல் தொடர்பாக விரிவாக விவரித்துவிட்டு, "இப்படி மத்திய சர்க்கார் கையிலே ஏராளமான வரி இனங்கள் இருக்கின்றன. ஆகவே, மத்திய சர்க்கார் அதிகமான நிதியைப் பெறுகின்ற அட்சய பாத்திரமாக இருக்கின்றது. மாநில சர்க்காரைப் பொறுத்தவரையில், பெறுகின்ற நிதி, வருமானம் மிகக் குறைவாகும். இன்னும் சொல்லப்போனால், இந்த சேல்ஸ் டேக்ஸை விட்டால், மாநில சர்க்காருக்கு வரி வருமானமே இல்லாத ஒரு சூழ்நிலைதான் உள்ளது" என்று மாநில உரிமைகள் தொடர்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தெளிவான பார்வையை முன்வைத்தார். மேலும், "இந்த நாட்டில் தலைக்கு வரி என்று முகலாய சாம்ராஜ்ஜியத்திலேயே 'ஜாஸ்யா வரி', 'காபிடேஷன் பீ' என்று போட்டார்கள். இன்றைக்கு எந்த முதலமைச்சராவது, அன்று கலைஞர் குறிப்பிட்டதைப் போல, தலைக்கு வரி போட்டால் அவர்கள் தலை தப்பாது" என்று கூறி அவையிலேயே சிரிப்பலையையும் ஏற்படுத்தினார்.

> மாநில சர்க்காரைப் பொறுத்தவரையில், பெறுகின்ற நிதி, வருமானம் மிகக் குறைவாகும். இன்னும் சொல்லப்போனால், இந்த சேல்ஸ் டேக்ஸை விட்டால், மாநில சர்க்காருக்கு வரி வருமானமே இல்லாத ஒரு சூழ்நிலைதான் உள்ளது.

சிரிப்பு, நையாண்டி மட்டுமல்ல ஆளுங்கட்சியினரைத் திணறடிக்கச் செய்யும் காரசார வாதங்களையும் ரகுமான்கான் அவையிலே இருந்தால் நிச்சயம் காண முடியும். அதேபோல், 1979, பிப்ரவரி 17-ஆம் தேதி, அரசியலமைப்பு 45-வது சட்டத் திருத்தத்திற்கு ஏற்பளிப்பது குறித்து சட்டமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது, அ.தி.மு.க. அரசின் இரட்டை நிலைப் பாட்டை தோலுரித்தார். "அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தபோது, 42-வது அரசியல் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது, அ.தி.மு.க. அதை ஆதரித்து வாக்குகளை வழங்கியது. இன்றைய தினமோ, 42-வது சட்டத் திருத்தம் ஜனநாயகத்துக்கு விரோதமானது, ஜனநாயக உரிமைகளைப் பறிக்க வல்லது. எனவே, அதை நீக்க வேண்டுமென்ற வகையில் கொண்டுவரப்பட்டுள்ள 45-வது சட்டத்திருத்தத்தையும் அ.தி.மு.க. ஆதரிக்கிறது. அன்று இந்திரா காந்தியை ஆதரித்தது, இன்று மொரார்ஜி தேசாயை ஆதரிக்கிறது. அவர்களது சின்னம் இரட்டை இலை... அதனால் இரட்டை நிலை" என்று ரகுமான்கான் பேசியது, அ.தி.மு.க.வினரை கோபமடையச் செய்தது. ஆனால், அவருடைய வாதத்திற்கு நேர்மையான பதிலோ, மறுப்போ வரவில்லை.

...நீளும்

## அபாயத்தில் தமிழ்நாட்டு அரசியல்!

'1952-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் தொங்கு சட்டமன்றம் ஏற்படவில்லை; கூட்டணி அமைச்சரவைமூலம் அணி மாறுதல், கட்சி மாறுதல் போன்ற அரசியல் அவலங்கள் வரவில்லை. இப்போது, மகா வெட்கப்படத்தக்க வேதனையான அரசியல் நடந்து வருகிறது' என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்...

"தொங்கு சட்டமன்றம், கூட்டணி அரசுமூலம் நிலையான ஆட்சி ஏற்பட்டாலும், கொள்கைச் சமரச ஆட்சியாக அமையும் பேரபாயம் என்பது அதன் உடன் அமைந்த அம்சம் என்பதால், ஒரு கட்சிக்குத் தனித்த பெரும்பான்மை தரும் தெளிவான நிலை, தமிழ்நாட்டில் தொடர்ந்தது. 2006-இல் இதே தத்துவத்தின் அடிப்படையில்தான், அறுதிப் பெரும்பான்மை இல்லாவிடினும் பிற கட்சிகளின் ஆதரவைப் பெற்று, தனித்த ஆட்சியாகவே கலைஞர் ஆட்சி நடந்தது. அதன் கொள்கைப்பூர்வ திட்டங்களால் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படாத நிலை இருந்தது.

தற்போது, தமிழ்நாட்டு அரசியல் களம் 'குதிரை பேரங்கள்', பதவி அரசியல் தேடிகளின் கூடாரமாகி வருவது விரும்பத்தக்கதல்ல! அதன் விளைவாக, ஜனநாயகத்தின் பலவீனத்தால் ஏற்படும் அரசியல் பிழைத்த நிலை - சிறிதும் நேர்மையின்றி, 'ஆசை வெட்கமறியாது' என்ற பழமொழி போல, நாளும் நடக்கிறது.

மாற்றத்திற்காக வாக்களித்தவர்கள் - இந்தப் 'பேரங்களை'யும் அரசியல் அருவருப்புகளையும் கண்டு, 'ஏமாற்றம்' என்பதைப் புரிந்து கொண்டு, தங்களது முடிவுகளை மாற்றத் தெரியாதவர்கள் அல்ல! முன்பு, 'ஓகோ'வென்று சட்டமன்றத்தில் ஆட்சி அமைத்த அண்ணா தி.மு.க. தலைவர் எம்.ஜி.ஆர்., 9 ஆயிரம் வருமான உச்சவரம்பைக் கொண்டு வந்ததினால், நாடாளுமன்றத் தேர்தலில் 39 இடங்களில், 37 இடங்கள் தோற்று, இரண்டு இடங்கள் (கோபி, சிவகாசி ஆகிய தொகுதிகளில்) மட்டுமே வென்று, அதிர்ச்சித் தோல்வி கண்டு, பிறகு தன்னைத் திருத்திக்கொண்டது தமிழ்நாட்டின் பழைய அரசியல் வரலாறு என்பதை இன்றைய ஆளுங்கட்சி மறந்துவிடக் கூடாது.

'குதிரை பேரம்' என்பதற்கு பதில் சொல்வதாக, அரசியல் வீர வசனம் பேசுவது மட்டும் அறம் சார்ந்ததாக ஒருபோதும் ஆகாது. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றம்' என்பது புரியட்டும்! 'குதிரை பேரமல்ல; குதிரை வேகம்' என்பது சொல் அலங்காரமா? அதே குதிரை, கீழே தள்ளி குழியும் பறிக்கும் என்ற ஆபத்தை, ஆட்சியாளர்கள் மறந்துவிடக் கூடாது" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



பூவை துரையரசன்



### அண்ணா அறிவாலயக் கட்டட நிதி

1985-ஆம் ஆண்டு, 'ஆவடி படைத் துறை உடை ஆக்கத் தொழிற்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்க'த்தின் சார்பில், நானும் தொழிற்சங்க உறுப்பினர்களான சூளைமேடு ராஜேந்திரன், பெரம்பூர் காந்தரூபன், ஈ.விஸ்வநாத் சிங், தண்டபாணி ஆகியோரும் அண்ணா அறிவாலயக் கட்டட நிதி வழங்க, தலைமைக் கழகமான அன்பகத்துக்குச் சென்றிருந்தோம். தலைவர் கலைஞர் அவர்கள், உடனடியாக எங்களைப் பார்த்து நிதியைப் பெற்றுக் கொண்டு, எங்களையும் பாராட்டி வாழ்த்தினார். அன்றைக்கு, அவருடன் மகிழ்ச்சியாக அளவளாவிக் கொண்டிருந்த இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போது, இதயமெங்கும் அந்த நினைவலைகள் வந்து மோதும்.

- பூவை துரையரசன்,
முன்னாள் நகரத் துணைச் செயலாளர்,
பூவிருந்தவல்லி, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### உளப்பூர்வமாக...

6.2.1967 அன்று, தி.மு.கழகம் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, ராஜாஜி மண்டபத்தில் பதவியேற்பு விழா நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா முதல்வராகவும், நாவலர், கலைஞர், கே.ஏ.மதியழகன், சத்தியவாணி முத்து உள்பட எட்டுப் பேர் அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றனர். பதவியேற்பின்போது, 'கீதை', 'ராமாயணம்', 'குரான்', 'பைபிள்' ஆகியவை அருகில் இருந்தும் யாரும் அவற்றைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை. 'உளப்பூர்வமாக...' என்றே மொத்த அமைச்சரவையும் உறுதிமொழி எடுத்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900